உ

சிவமயம்

அமரர்

சின்னத்தம்பி முத்துத்தம்பி

அவர்களின்

# நினைவுமலர்



# In Memoriam

## Sinnathamby Muthuthamby

17 - 8 - 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# சின்னத்தம்பி முத்துத்தம்பி

அவர்களின்



தோற்றம்
29 - 04 - 1909

மறைவு
18 -07 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்தம்பி முத்துத்தம்பி

சின்னத்தம்பி முத்துதம்பி 88 வருடங்கள் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து 18-07-97 அன்று இறைவனடி சேர்ந்தார். அவருடைய மறைவுடன் ஒரு சகாப்தம் முடிவடைகிறது என்று சொல்லலாம். ஏனெனில் யாழ்ப்பாணத்து தமிழரின் முந்திய சந்ததியைப் பிரதிநிதிப்படுத்தியவர் அவர். அவர் காலத்தவரில் எஞ்சி இருப்பவர் சிலரே. முந்திய சந்ததியினர் ஒரு தனித்துவமான வாழ்க்கை வாழ்ந்து யாழ்ப்பாண மண்ணுக்கு பெருமை தேடிக்கொடுத்தார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளும் அவர்கள் காலத்தில் இருந்து வந்தன. அப்படியானவர்களின் வாழ்க்கையில் ஒரு சிறப்பு அம்சம் என்னவெனில் ஒரு கொள்கை அடிப்படையிலேயே அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் செயல்கள் எல்லாம் அதற்கு இயல்பாகவே அமைந்தன. அமரர் முத்துத்தம்பி 'செய்வன திருந்தச் செய்' என்னும் கொள்கையை பின்பற்றினார். அதனாலேயே தான் மேற்கொண்ட யாழ். மாநகர சபை உத்தியோகத்தில் முழுமூச்சாக ஈடுபட்டார். சபை சரியான வழியில் இயங்க உதவினார். தனது மேல் அதிகாரிகளுக்கு (Mayors, Municipal Commissioners) விசுவாசமாக இருந்தார். ஆனால் பக்கச்சார்பாக நடக்கவில்லை. தனது உத்தியோகநேரம் முழுவதையும் மாநகரசபை நலனுக்கு உழைப்பதிலேயே செலவழித்தார். அந்த நேரத்தில் வேறெதையும் சிந்திக்கவோ, வீண்பொழுது போக்கவோ மாட்டார். அவர் மேலதிகாரிகளுக்கு கொடுத்த ஆலோசனை, நடு நிலைமையில் நின்று கொடுப்பதாய், மாநகரசபை நலன் பேணுவதாய் அமைந்தது.

வீடு திரும்பியதும் தனது குடும்பத்தை கவனிப்பவராயும், இனத்தவர்கள், நண்பர்கள் ஆகியோரின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவராயும் இருந்தார். சிறந்த கணவனாயும், பாசம்மிகுந்த தகப்பனாயும், அன்புப் பேரனாயும் விளங்கினார். தனது மருமகனை நல்வழிப்படுத்தினார். தனது குடும்பத்தினருக்கு வேண்டிய வேண்டியதெல்லாம் செய்தார். அதேபோல் இனத்தவர்க்கும். அவரது பொழுதுபோக்கு தமிழர் வரலாற்றை, தன்னைச் சேர்ந்த குடும்பங்களின் வரலாற்றை ஆராய்தல். எத்தனையோ பேருக்கு அவர்கள் முன்னோர்கள் யார் என்பதை எடுத்து உணர்த்தினார். எத்தனையோ பேருக்கு கல்வெட்டுக்கள் எழுதி உதவினார். எவரும் தங்கள் முன்னோர் யார் என்பதை அறியவேண்டும், அவர்கள் பெருமைகளை உணரவேண்டும் என்பதே அவர் கோட்பாடு.

அவரது ஆத்மா சாந்தியடைவதாக

**க. அருணாசலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோப்பாயூர் மானா முதலியார் வழியினரான

## சின்னத்தம்பி முத்துத்தம்பி அவர்கள்

அமரர் முத்துத்தம்பி அவர்களின் தந்தையார் கோப்பாயூர் மானாமுதலியார் (Don Philippu Mana Mudaliyar 1760 ) வண்ணை சின்ன உடையார் காவல முதலியார் ஆகியோர் இணைந்த குடும்பத்தவரான வைத்திலிங்கம் சின்னத்தம்பி அவர்களாவர். தாயார் ஊரெழு கிழக்கு வயித்தி உடையாரின் மைத்துனரான இலங்கையர் கணபதிப்பிள்ளையின் மகள் பூரணம். திருவாளர் முத்துத்தம்பி 1909 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29ம் தேதி மேற்படி மானா முதலியார் பெண் குஞ்சிப் பிள்ளையின் தோம்பிற்குரிய 'கழனியவத்தை' எனும் காணியில் பிறந்தார். இவரது மூன்றாம் வயதில் தாயார் இறந்துபோக, தந்தையார் தமது தாயாரின் சிறிய தாயாரின் மகளான வண்ணைக்குடி விநாசித்தம்பி மயில்வாகனம் அவர்களின் மகளான செல்லம்மாவை மணந்து கொண்டார்.

திருவாளர் முத்துத்தம்பி கோப்பாய் ஆங்கில பாடசாலையில் 5ஆம் வகுப்பை 1922 இல் முடித்த வேளை, தந்தையாரின் தம்பியான ஐக்கிய மலாய நாட்டு நீதிமன்ற துவிபாஷகராகவிருந்த மானா முதலியார் வைத்திலிங்கம் செல்லையா அவர்கள் விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். சூழ்நிலையைக் கவனித்த வகையில் குடும்ப நலனைக் கருத்திற்கொண்டு, இவரது பராமரிப்புப் பொறுப்பை ஏற்று, தம்மோடு மலாய் நாட்டுக்கு அழைத்துச் சென்றார்.

அங்கே படிப்பை 5 ஆம் வகுப்பில் தொடங்கிய திருவாளர் முத்துதம்பி 1928 டிசெம்பரில் நடந்த சீனியர் கேம்பிறிட்ஜ் சோதனையை (Cambridge School Certificate) முடித்துக் கொண்டார். அவ்வேளை இவரது தந்தையாருக்கு சுகவீனம் ஏற்பட்டதன் காரணமாக இவர் யாழ்ப்பாணம் வரவேண்டியதாயிற்று. நீண்ட நாள் சுகவீனமாக விருந்த தந்தையார் மரணமடைய, அவரது மரணச் சடங்குகளை முடித்துக்கொண்டு 1929 பிற்பகுதியில் மலாயா திரும்பினார். அங்கு அரசாங்க உத்தியோகம் தேடலானார்.

மலாயாவில், 1923 இல் அரசாங்க உத்தியோகம் அவ்வூர்ப் பிறந்தவர்க் கேயென மட்டுப்படுத்தப்பட்டது. இருந்தும், யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்கள் பலர் மாற்று வழிகளைக் கையாண்டு அரசாங்கத்தில் உத்தியோகம் பெற்றனர். 1930 இல் அரசாங்க நிதி நிலைமைக்கு மூலகாரணமான இறப்பரின் விலை வீழ்ச்சியடையத் தொடங்கியது. உத்தியோகத்துக்கு 'பூமிபுத்ரா' கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தப்பட்டதோடு, முதியோர் பலரையும் இளைப்பாறச் செய்தனர். இந்த நிலையில் அரசாங்க உத்தியோகத்தை மறக்க வேண்டியதாயிற்று.

மானா முதலியார் வைத்திலிங்கம் செல்லையா அவர்கள் தனது நண்பர் பரிஸ்டர் கே. எம். குமாரசாமி, அவரது உதவியாளர் பரிஸ்டர் இராதா கிருஷ்ணன், இரமணி ஆகியோரிடம் இவரது நிலைமையை விளக்கி இவரை அவர்களது காரியாலயத்தில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டதற்கமைய அவர்கள் இவரை வேலை பழகுநராக ஏற்றுக் கொண்டார்கள். இவ்வாறு ஐந்து வருடகாலம் கடமையாற்றி, 1936 இல் மா.வ. செ. அவர்கள் ஓய்வுபெற்று ஊர் திரும்பியபோது இவரும் அவரோடு யாழ்ப்பாணம் திரும்பினார்.

1937 இல் யாழ்ப்பாண நகரசபையின் காரியாலய அலுவல்கள் அமைப்புச் சீரமைக்கப்பட்டது. நான்கு இலிகிதர்கள் பதவி உருவாகியது. முதன்முதலாக அடிப்படைக் கல்வித் தராதரம் நிர்ணயிக்கப்பட்டு, பகிரங்க அறிவித்தல் மூலம் இப் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

திருவாளர் முத்துத்தம்பி அவர்களின் முன்னைய காரியாலய அனுபவம், தட்டச்சு ஆற்றல் அகியவற்றின் அடிப்படையில் அவர் முதலாவதாகத் தெரிவுசெய்யப்பட்டார். மேற்படி சபையின் செலவினங்கள், வரவு, செலவுத் திட்டம், மாதாந்த, வருடாந்தக் கணக்குகள் முதலியவற்றுக்குப் பொறுப்பாக இருந்த பிரதம இலிகிதரும் உதவிக் காரியதரிசியுமான திரு. ஏ. எஸ். இளையத்துலா அவர்களுக்கு உதவியாளராக இவர் பணியாற்றத் தொடங்கினார்.

1937-40 இல் நகரசபைத் தலைவர் திரு. சாம். சபாபதி அவர்களின் பணிப்பின் பேரில் அகில இலங்கை நகரசபைகளின் சங்க காரியதரிசியாகப் பணியாற்றிய யாழ் நகரசபை உப தலைவர் திரு. எஸ். பதஞ்சலி, எம். பி. ஈ. அவர்களின் உதவியாளராக அமர்ந்து அவரது பணியைச் சுலபமாக்கி, அவரது நன்மதிப்பையும் பெற்றார்.

1946 இல் அகில இலங்கை உள்ளூராட்சிச் சேவை உருவாக்கப்பட்டது. அதில் இவர் இரண்டாம் தர இலிகிதராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். 1950இல் இலிகிதர் சேவை முதலாம் பிரிவுக்கு தெரிவு செய்யும் பரீட்சை கொழும்பில் நடைபெற்றது. சுமார் 100 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். தெரிவு செய்யப்பட்ட 12 பேர்களில் திருவாளர் முத்துத்தம்பி மூன்றாவது இடத்தை வகித்தார். பதவி உயர்வுடன் கூடிய நியமனம் யாழ்ப்பாண நகரசபையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. தொடர்ந்து விசேட பிரிவுக்கு விதிக்கப்பட்ட தகுதி காண் பரீட்சையும் வெற்றிகரமாக முடித்துக் கொண்டார்.

1945இல் வண்ணை டாக்டர் சிவப்பிரகாசப்பிள்ளை, ரேகுத்துரை அருணாசலம் பிள்ளை ஆகியோரின் பேத்தியும் ரேகுத்துரை செல்லப்பாபிள்ளையின் கனிஷ்ட புத்திரியுமான விஜயம்மா (தஞ்சி) வை திருமணம் செய்து கொண்டு வண்ணார்பண்ணையில் குடியேறினார்.

வண் மேற்கு அரசடி வீதியில் இவர்கள் குடியிருந்த காணி 30 பரப்பு விஸ்தீரணம் கொண்டது. இக் காணியின் அடிப்பாகத்துக்குப் போக்குவரத்து செய்ய வசதியாக சுமார் மூன்று பரப்புக் காணியைப் புறநீக்கலாக்கி ஓர் பாதையை உண்டாக்கி, அதற்கு காணி உரிமையாளரின் வீட்டுப்பெயரை ஞாபகப்படுத்தும் விதத்தில் 'தஞ்சி லேன்' என்ற பெயரைச் சூட்டி உறுதியும் முடித்துக் கொண்டார்.

முத்துத்தம்பி தம்பதியரின் ஒரே மகளான சாவித்திரிதேவிக்கு தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளோடு, சங்கீதம் முதலிய கலைகளையும் கற்பித்து, அவருக்கு வயது வந்ததும் அவரை, வட்டு. கிழக்கு நொத்தாரிஸ் பரம்பரையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கந்தையா (சிறாப்பர்)வின் பாரியார் வண்ணை பிறவுண்சின்னத்தம்பியார் குடும்பத்து பிரக்டர் கந்தையாவின் புத்திரியான நாகேஸ்வரியின் கனிஷ்ட புதல்வன் திரு. கணேசலிங்கம், (B.Sc. Dip-in-Education) அவர்களுக்கு 1969இல் திருமணம் செய்து, அவர்களை வண்ணையில் குடியமர்த்தினார்.

1955இல் மேயர் குவாஸி எம்.எம்.சுல்தான், ஜே.பி. அவர்களுக்கும் ஆணையாளர் பாரிஸ்டர் கே. சண்முகம் அவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட அதிகார உரிமைத் தகராறு உச்சக்கட்டமாக இருந்த நேரத்தில் முத்துத்தம்பி அவர்கள் சங்கடமான சூழலில் தனது நேர்மைக்கும், கடமைக்கும் மேயரின் நம்பிக்கைக்கும் பங்கமில்லாது கடமையாற்றியதற்கு மேயர் தெரிவித்த நன்றிக் குறிப்பு 26-06-1955 ஆம் தேதிய மாநகர சபை கூட்ட அறிக்கையில் இடம் பெற்றிருக்கிறது.

1951 இல் மேயர் ஸி. பொன்னம்பலம் அவர்கள் (அட்வகேட்) சேர் மகாதேவாவினது 'யாழ்ப்பாணக் குழாய் நீர்த் திட்டத்தை' துரிதப்படுத்துமாறு வலியுறுத்தியதற்கமைய, அப்பொழுது பிரதமராகவிருந்த கௌரவ டி.எஸ்.சேனாநாயக்கா அவர்கள் மேயர் அவர்களை 05-12-1951இல் தன்னைச் சந்திக்குமாறு அழைத்தார். அவசிய வேலை காரணமாக மேயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில் செல்ல முடியாத நிலையில் ஆணையாளர் திரு. கே.சண்முகம், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இராசசிங்கம் ஆகியோரை தனது சார்பில் பிரதமரைச் சந்திக்க அனுப்பிய நேரத்தில், "சபையின் நிதி நிலைமை பற்றிப் பூரணமாக அறிந்தவரும், நீண்ட கால அனுபவம் காரணமாக நீர் விநியோகத் திட்டத்தின் நிதி நிலவரங்களை நன்கு புரிந்து கொள்ளக்கூடியவருமான எழுதுவினைஞர் எஸ். முத்துத்தம்பியையும் உதவிக்கு அழைத்துச் செல்லுமாறு" பணித்தார்.

யாழ்ப்பாண உள்ளூராட்சி ஆணையாளராகக் கடமையாற்றியவரும், பின்னர் பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசார அமைச்சின் நிரந்தர செயலாளராக உயர்வு பெற்றவரும், மாநகர சபையின் விசேட ஆணையாளராகப் பணிபுரிந்தவருமான திரு. எஸ். சி.மாணிக்கவாசகர் C.A.S. அவர்கள்:

> "Some and some only are destined to be born with a faultless character that enables one to work as outlined in the Githa with detachment but with dedication. You were one of the few human beings who had these qualities in abundance and added that in our relationship the advantages were entirely one way affair - I received the benefits and harvested the bounties of your goodwill"

என்று எழுதியதும், 1968 இல் ஆணையாளர் திரு. ஹட்சன் செல்வராஜா அவர்கள், திரு. முத்துத்தம்பி ஓய்வு பெறு முன் அவரை விசேட தரத்துக்கு உயர்த்துமாறு விசேட ஆணையாளரை வலியுறுத்தியும், அப்பொழுது விசேட ஆணையாளராகவிருந்து யாழ்ப்பாண பகிரங்க வேலைப் பகுதி தலைவர் திரு.என்.நடேசன் அவர்கள் :

> " I am happy to record that anything that comes in the way of work is not task to be shelved for him nor too small to be ignored by him and if it is said "confidential' it was really confidential and pitied that he has not been granted Special grade as yet"

என்று எழுதி வைத்தும், மாநகரசபை ஆணையாளர் திரு. டீ.டீ.ஜயசிங்ஹ, ஜே.பி. அவர்கள் 1964 இல் மாற்றம் பெற்றுச் செல்லும் நேரத்தில் :

> "Mr.Muttuthamby was a class by himself so devoted to duty and thoroughly loyal to the administration and set a very high standard of integrity and efficiency" and added that "Mr. Muttuthamby was considered the 'Encyclopedia of the Jaffna Municipal Council"

என்று எழுதி வைத்ததும் இவரது திறமைக்கும், கடமை உணர்ச்சிக்கும், நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக மிளிர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22-04-1969 ஆம் தேதி நடைபெற்ற யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் திரு. முத்துத்தம்பி அவர்களின் இளைப்பாற்றுச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்ட வேளை, மேயர் திரு. எஸ். நாகராஜா, (அட்வகேட்) அவர்கள், திரு. முத்துத்தம்பி அவர்களின் சேவை நலன் பற்றிய பாராட்டுப் பிரேரணையில் அடங்கியிருந்த பிரதான அம்சங்களாவன:

'1937 ஆம் ஆண்டிலிருந்து 32 ஆண்டுகள் தொடர்ந்து சேவையாற்றினார்.

இக் காலப்பகதியில் இவர் நான்கு தலைவர்கள், ஏழு நகராட்சி ஆணையாளர்கள், ஆறு நகரசபை முதல்வர்கள், இன்னும் உள்ளூராட்சி ஆணைக்குழுவின் தலைவர் உட்பட விசேட ஆணையாளர்கள் ஆறு பேர் ஆகியோரின் கீழ் திறம்படக் கடமையாற்றியுள்ளார்.

உள்ளூராட்சி, மாநகர மன்ற நிர்வாகம் சம்பந்தமான சட்டங்களிலேயுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் ஆராய்ந்து, கற்றுத் தெளிய வேண்டுமென்ற பேரவா உடையவராகவே இவர் என்றும் விளங்கி வந்துள்ளார்.

நிர்வாகம் சம்பந்தமாக மட்டுமன்றி, சட்டப் பிரச்சனைகள் ஏற்படும் நேரங்களிலெல்லாம் ஆணையாளர்களும், மாநகர முதல்வர்களும் அடிக்கடி இவருடைய அபிப்பிராயத்தைக் கோரிப் பயன் அடைந்துள்ளனர்.

உள்ளூராட்சி சேவையிலே பதவி உயர்வுக்கும், தகுதி காண் பரீட்சைகளுக்கும் ஆயத்தம் செய்வோருக்குப் பயன்படத்தக்க வகையில் உள்ளூராட்சி, அதனோடு தொடர்புடையனவான சட்டங்கள் பற்றிய சுருக்கக் குறிப்புகள் யாவற்றையும் இவர் தெளிவாக எழுதிவைத்துள்ளார். இவற்றை உள்ளூராட்சி நிர்வாக சேவை, எழுதுவினைஞர் சேவையில் உள்ளவர்கள் பயன்படுத்தி பயனடைந்து வருகின்றனர்.

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையம் கட்டப்பட்ட நேரத்தில் கட்டட ஒப்பந்தக்காரருக்கும் மாநகரசபைக்கும் இடையே நடந்த மத்தியஸ்த நிகழ்ச்சியில் இவருடைய சட்ட நுணுக்க அறிவு மிகவும் பயன்பட்டது.

அரசாங்க மின்சாரத் திணைக்களத்திடம் மின்சாரத்தைத் தொகையாக வாங்குவது சம்பந்தமாக மாநகரசபைக்கு ஏற்பட்ட நட்டம் ஆகிய விஷயங்களில் உள்ள பல அம்சங்களையும் ஆராய்ந்து அறிந்து கொண்டதோடு நகரசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்வர்களுக்கும் மின்வலு அமைச்சருக்கும் இடையில் காலத்துக்குக் காலம் நடைபெற்ற மாநாடுகளில் மிக நெருங்கிய தொடர்பு கொண்டு வந்துள்ளார்.

இவருடைய சேவை பெரும்பாலும் மாநகரசபை கணக்குப் பகுதியுடனே சம்பந்தப்பட்டதாகும். கணக்கு வைப்பு முறை, செலவினம், வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு ஆகியன (முன்னால் பிரதம லிகிதர் திரு.இளையத்துலாவுக்குப் பின்) இவருடைய பொறுப்பில் அமைந்த பிரதான விடயங்களாகும்.

தனது கண்காணிப்பிலுள்ள செலவினம் ஒவ்வொன்றையும் மிக நு ணு க்கமாகப் பரிசீலனை செய்துவந்து மாத்திரமன்றி, இப்பொழுது சபையின் நடைமுறையில் இடம்பெற்று வருவதான சகல அம்சங்களையும் உள்ளடக்கி, அவற்றின் செலவின முறை விபரங்களையும் கொண்ட வரவு செலவுத் திட்ட அமைப்பைப் புகுத்த இவரே காரணமாக இருந்தார்.

கணக்காளர் பதவி நிரப்பப்படாதிருந்த ஆறு மாத காலப்பகுதியில் இவர் பதில் கணக்காளராகக் கடமையாற்றியுள்ளார்.

விசேட ஆணையாளர்களின் கீழ் சபையின் நிர்வாகம் நடைபெற்ற காலங்களில் இவர் விசேட ஆணையாளர்களின் செயலாளராகப் பணியாற்றி அவர்களுடைய நம்பிக்கைக்கும் மதிப்புக்கும் உரியவராக விளங்கினார். இவருடைய ஆற்றலையும் உயர்ந்த சேவையையும் மதித்து இவருக்காகவே உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையில் சிறப்புப் பதவியொன்றை முதன்முதலாக உருவாக்கி திரு. முத்துத்தம்பி அவர்கள் காரியாலய உதவியாளர் Office - Assistant, என்ற அந்தஸ்தோடு அப்பதவிக்கு பதவி உயாத்தப்பட்டு, அப் பதவியிலிருந்தே ஓய்வுபெற்றுறார்.

மாநகரசபைக்கு எது சிறப்பைத் தருமோ அதுவே இவருடைய நடைமுறையும் விசுவாசமுமாக இருந்தது. இவரது விசுவாசம் முதல்வர் பதவிக்கே அன்றி முதல்வர் பதவியை வகித்தவர்களுக்கு அல்ல என்பது இவரது செயற்பாடாகும். இந்த முறையில் செயலாற்றிய இவருடைய பெருமையை முதல்வர்களும் ஆணையாளர்களும் மெச்சிப் புகழ்ந்துள்ளதோடு, திரு. முத்துத்தம்பி இம் மாநகரசபையின் மதிப்பற்ற பொக்கிஷம் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இவர் தனது நேர்மைக்கும் சீரிய பண்புக்கும் பங்கமேற்படும்படி எந்தச் சமயத்திலும் நடந்து கொண்டதில்லை'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேயர் திரு. நாகராஜா அவர்களுடைய மேற்குறித்த பாராட்டுப் பிரேரணை சபையால் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பதிவேட்டிலும் இடம் பெற்றது.

திரு. முத்துத்தம்பி அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் மாநகர சபை அவருடைய சேவையைப் பெற்றுப் பெரும் பயன் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். இவர் ஓய்வு பெற்ற பின்னர், 24-10-1969 இல் கொழும்பில் மின்வலு அமைச்சர் அலுவலகத்தில் மின்சாரத் திணைக்கள அதிகாரிகளுக்கும் யாழ்ப்பாண மேயர் அவர்களுக்குமிடையில் நடைபெற்ற மகாநாட்டில் மேயர் திரு. எஸ். நாகராஜா அவர்கள் பங்குபற்றியபோது, இவ்விடயத்தை நீண்ட காலமாகக் கையாண்டு, இவ்விடயத்தில் ஆழ்ந்த அறிவும் தெளிவும் கொண்டவரான இவர் மேயருடன் விசேடமாக அம் மகாநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அம் மகாநாட்டில் மேயர் அவர்களுக்கு உதவியாக இருந்து வேண்டிய விளக்கங்களையும் தரவுகளைம் வழங்கி, மேயர் அவர்கள் கொடுப்பனவிலிருந்து ரூபா 698,512/-- கழிவு பெறுவதற்கு உதவினார். இதனைத் தொடர்ந்து மேயர் 06-11-1969 இல் சபையின் விசேட கூட்டமொன்றை கூட்டி இது தொடர்பாகச் சமர்ப்பித்த அறிக்கையை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அந்த அறிக்கையில், 'சபையின் வருமானத்தைப் பாதிக்கக் கூடிய நிலையைக் கண்டு உடன் நடவடிக்கை மேற்கொண்ட காலஞ்சென்ற மதிப்பக்குரிய சாம்.ஏ. சபாபதி (மேயர்) அவர்கட்கு நன்றி செலுத்துவதாகவும், ஆரம்ப காலம் தொட்டு இறுதி வரை மிகவும் பொறுப்புணர்வோடும் ஆர்வத்தோடும் தனது கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் எமக்கு முன்னின்று உதவிய ஓய்வுபெற்ற அலுவலக உதவியாளர் திரு. முத்துத்தம்பி அவர்களுக்கு விசேடமாகத் தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும்' குறிப்பிடப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையைக் கட்டட நிதிக்காக, காலத்துக்குக் காலம் யாழ் மாநகர சபையினால் மேயர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட களியாட்டு விழாக்களின் போது இரவிரவாகக் கண்விழித்திருந்து சக ஊழியாகளுடன் இணைந்து பணியாற்றிய பெருமையும் இவருக்குண்டு.

1979 இல் மேற்குறிப்பிட்ட 'தஞ்சி லேனில்' குடியிருந்தவரான பாலசுந்தரம்பிள்ளை என்பவர் அயலார் மூவரைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு இந்த ஒழுங்கையின் பெயரை மாற்றி வேறொரு பெயர் வைக்க பெரு முயற்சியெடுத்தார். இதை அறிந்த திரு. முத்துத்தம்பி, வீதிகளுக்குப் பெயர் சூட்டும் பொறுப்புக்குரிய யாழ் மாநகர சபைக்கு, குறித்த ஒழுங்கையின் பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு அமைய காரணமாக இருந்த ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பித்து, 'தஞ்சி லேன்' என்னும் பெயரை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். அவ்வேளை யாழ் மாநகரசபை தமிழரசுக் கட்சியின் அதிகாரத்தின் கீழ் இருந்தது. பாலசுந்தரம் பிள்ளை தமிழரசுக்கட்சி அங்கத்தவர் என்ற செல்வாக்கைப் பயன்படுத்தி இம் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டார். விடயம் இழுபட்டது.

1981 இல், இந்த ஒழுங்கை அமைந்துள்ள நல்லூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். சிவசிதம்பரம், அட்வகேட் அவர்கள் இவ்விடயத்தில் தலையிட்டு, பூரண விசாரணை நடாத்தி 'தஞ்சி லேன்' என்னும் பெயரை உறுதிப்படுத்துமாறு மேயர் திரு. ஆர். விசுவநாதன் அவர்களுக்கு சிபாரிசு செய்ய, மேயர் அவர்கள் சட்டப்படி நடவடிக்கையெடுத்து 29-04-83 ஆம் தேதி நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் 'தஞ்சி லேன்' என்னும் பெயரை உறுதிப்படுத்தும் தீர்மானத்தை நிறைவேற்றி, உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்தையும் பெற்றார். இதைத் தொடர்ந்து 23-03-84 இல் 'தஞ்சி லேன்' என்ற பெயர்ப்பலகை மாநகர சபையால் நாட்டப்பட்டது.

உள்ளூராட்சி சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் இவர் இருபாலை, மறவன்புலவு ஆகிய இடங்களில் உள்ள தங்கள் நெற்காணிகளை ஊக்கத்தோடு செய்கை பண்ணியதோடு வாரத்தில் ஒரு நாள் நண்பர் டாக்டர் வெற்றிவேலு அவர்களுடன் அவரது இயக்கச்சி தென்னந் தோட்டம். முரசுமொட்டை நெற்காணி ஆகியவற்றையும் பார்வையிடுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இவரது பாரியார் தொய்வு எனும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டவர். டாக்டர் வெற்றிவேலு அவர்களின் வைத்திய உதவியுடன் அவரைக் குறைவின்றிக் கவனித்து வந்தார். 1983 இல் மூன்று நாள் சுகவீனத்தோடு அம்மையார் கஷ்டமின்றி இயற்கையெய்தினார். ஈமக் கிரியைகள் உரிய முறையில் ஒப்பேறின. அதனைத் தொடர்ந்து, இவர் திரு. கணேசலிங்கம் தம்பதிகளின் ஆதரவில், பேரப்பிள்ளைகளான செல்வி ஈஸ்வரப்பிரியா, செல்வன் கிரீஷன், செல்வி கீர்வாணி ஆகியோரின் அரவணைப்பில் நிம்மதியாகத் தனது காலத்தைக் கழித்து வந்தார்.

முன்னர் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிஸ்டர் ரமணி அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் மலேசியாவின் நிரந்தர தூதுவராக இருந்த காலை, 1986 இல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் ரஷ்யாவுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவுக்கும் இடையில் நடந்த மிகச் சிக்கலான டொமினிக்கன் விவாதத்தில் ·Dominican ebate, தலைமை வகித்து, மதி நுட்பமாக, பக்கச்சார்பற்ற முறையில் ஒப்பேற்றியதை இரு நாட்டுப் பிரதிநிதிகளும் பாராட்டியதோடு, பத்தரிகைகளும் 'The best yet' எனப் புகழுரை சூட்டின. திரு. முத்துத்தம்பி அவர்கள் இவருடன் கொண்டுள்ள நெடுங்காலத் தொடர்பும், இவரிடம் கற்றவையுமே தனது முன்னேற்றத்துக்கு அத்திவாரமாக அமைந்தன என அடிக்கடி கூறுவார்.

ஓய்வு நேரங்களில் யாழ்ப்பாணக் குடியேற்றத்தில் பிரபல்யம் பெற்றோரின் சரித்திரங்களை ஆராய்ந்ததோடு, கோப்பாயார், வண்ணார்பண்ணையாரின் குடும்பக் கோப்புகளையும் தொகுத்துள்ளார். இவற்றின் அடிப்படையில் பலரது நினைவு மலர்களுக்கு வம்சாவழியும் தொகுத்து உதவியுள்ளார்.

இவர் ஐக்கிய மலாய் நாட்டு காயாங் ·Kajang, டிஸ்திரிக் அரசின் வைத்தியசாலைத் தலைவராகவிருந்து, 1928 இல் விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது எதிர்பாராத விதமாக மாரடைப்பினால் கோப்பாயில் மரணமான டாக்டர் வ. சுப்பிரமணியம், L.M.S. அவர்களின் பெறாமகனும், கோப்பாய் 'வாச்சாஒல்லை'க் குடி காலஞ்சென்ற சேதுகாவலர் – சேனாதிராசாவின் மைத்துனருமாவார்.

இவரது சிறிய தந்தையார் மானாமுதலியார் வைத்திலிங்கம் செல்லையா அவர்களும், அவரது பாரியார் (சண்டிலிப்பாய் நடுக்குறுச்சி டாக்டர் ஆ. அ.பரராசசிங்க முதலியார் மகள்) விஜயலட்சுமி அம்மாள் அவர்களும் தம்மை ஆளாக்கியதற்குக் கைமாறாக, மா.வ.செ. அவர்கள் சுகவீனம் காரணமாக மானிப்பாய் ஆஸ்பத்திரியில் இரு மாத காலம் தங்கியிருந்தபோது, அம்மையாருக்கு உதவியாக இருந்ததோடு இவர்கள் இருவரினதும் கொள்ளிக் கடனையும் நிறைவேற்றி, 'செலுங்கிளை தாங்கிய செல்லையா தம்பதிகள் வாழ்க்கை வரலாறு' எனும் ஞாபக மலரை 1988 இல் தொகுத்து குடும்பத்தினருக்கு உவந்தளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிய வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நிழலே.

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வோனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்


இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின்னும் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிழையோனே கதிர்காமப் பெருமானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஊர் மானா முதலியார் வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை உலககாவல முதலியார் வம்சாவழி

டொன் சுவாம்
சோமசேகர முதலியார்

சங்கரநாதர்

வினாசித்தம்பி
மெட்டை வினாயர்

விதானை அருளம்பலம்
சிவகுரர்
வயித்திலிங்கம் +

சிலகாமிப்பிள்ளை +
முத்துப்பிள்ளை +
பார்வதிப்பிள்ளை
சின்னத்தங்கம்
பொன்னு +
தம்பிப்பிள்ளை +
பொன்னம்பலம் +
கந்தையா +

சின்ன உலககாவல முதலியார்
மானாமுதலியார் சகோதரி (கோப்பாய்)

வினாயர்

வயித்தியநாதன்

சடாசிவம் + வீ. பூதாத்தை
வினாசித்தம்பி + வீ. சிதம்பரம்
சின்னத்தம்பி + மு. அருளம்பலம்
நாகமுத்து + மு. சின்னத்தம்பி
கதிராசிப்பிள்ளை

சோ. வீரவாகர்
சோ. தாமேதரம்பிள்ளை
சோ. மாணிக்கம்பிள்ளை

சோ. அப்பாப்பிள்ளை
சோ. இளையபிள்ளை –
வி. செல்லம்மா (கேப்பாய்)
வ. அன்னமுத்து (இலகடி)
சி. தங்கச்சி (கோப்பாய்)

சுவாமிநாதர்

சிவகாமிப்பிள்ளை
சபாபதிப்பிள்ளை

சிவகுருநாதன்
சிவசுந்தரவல்லி

இராசதுங்கம்
உ. சோமசேகரம்
சீ. சிவகாமிப்பிள்ளை

குமாரவேலர்

சுப்பிரமணியமர்
+ மீனாச்சிப்பிள்ளை

பரியாரி அப்பா
( நீராவியடி )

கோபாலபர்

சங்கரப்பிள்ளை

சன்முகம்

வள்ளியம்மை
+ பிறவுண் சின்னத்தம்பி

அம்பலவாணர்
+ நாச்சிப்பிள்ளை
(சுன்னாகம்)

வள்ளிப்பிள்ளை
+ குமரஉடையார்
(கோப்பாய்)

சிவகுருநாதன்
+ தெய்வானை

கமலம்

வெய்க்கட்டைப் பொன்னர்

வயித்திலிங்கம் — சகோதர முறையினர் — இந்துமதி
வள்ளியம்மை (கேப்பாய்) வீரசிங்கம் உடையார்
(நீர்வேலி)

பிறக்ரர்அரிச்சந்திரா

கனகரெத்தினம்

சின்னத்தம்பி
முத்துத்தம்பி + விஜயம்மா
சாவித்திரிதேவி + கணேசலிங்கம்
+சுவரப்பிரியா கிரீசன் கீர்வாணி

சே. செல்லம்மா

மானாமுதலியார் செல்லையா

Dr.சுப்பிரமணியம் L.M.s

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எமது அன்புத்தந்தையின்/ மாமனாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச்செய்தி அனுப்பியும், யாழ்ப்பாணத்தில் வீட்டில்வந்து ஆறுதல் கூறியும், மற்றும் எல்லாவழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

க. சாவித்திரிதேவி
க. கணேசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TYPESET AND PRINTED BY PRINT GRAPHICS
NO 4 NELSON PLACE, COLOMBO - 6 TEL : 596312

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org